**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி V இல் காலாண்டிற்கான (2007, ஒற்றோபர்-திசெம்பர்) புத்தகப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1669 - 2010 අගෝස්තු මස 27 වැනි සිකුරාදා - 2010.08.27**

*1669 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | 1580 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1581 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1583 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** *2010.08.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி III மற்றும் பகுதி IV (அ) என்பன பிரசுரிக்கப்படவில்லை.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2010, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஓகத்து மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

டீஆர்எப்/21/ஆர்ஈசீரீ/3093.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக மேஜர் கல்ஹேனகே சந்தன பிரியங்வது, உபுப (உ/62073)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, மே 10.

8-684

---

டீஆர்எப்/21/ஆர்ஈசீரீ/3094.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக மேஜர் நகதகே பிரதீப் மஞ்சுள மோதரகே, உபுப - (உ/61141)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, மே 10.

8-685

---

டீஆர்எப்/21/ஆர்ஈசீரீ/3095.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, யூலை மாதம் 14 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக கப்ரின் ஜயவீர முதியன்சேலாகே இந்திக்க பத்மகுமார ஜயவீர, இகாப (உ/64751)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, மே 10.

8-661

---

டீஆர்எப்/21/ஆர்ஈசீரீ/3073.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தர படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, சனவரி மாதம் 22 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் மாரசிங்கலாகே பிரபாத் மஞ்சுள தர்மரத்ன, கரெ (உ/62468)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, மே 10.

8-570

டீஆர்எப்/21/ஆர்ஈசீர்/3097.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் வாகபிட்டிய விதாரனலாகே தர்ஷண வஜிரநாத் குலதுங்க, கவீப (உ/66138)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, மே 10.

8-692

---

டீஆர்எப்/21/ஆர்ஈசீர்/3074.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

இரண்டாம் லெப்டினன்ட் பத்திரன்னஹலாகே நிலந்த இந்திக்க பதிரண, இகாப (உ/63552)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, மே 10.

8-686

---

டீஆர்எப்/21/ஆர்ஈசீர்/3096.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

இரண்டாம் லெப்டினன்ட் ஏக்கநாயக்க முதியன்சேலாகே ரனில் விஜேசிங்க ஏக்கநாயக்க இகாப (உ/66084)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, மே 10.

8-660

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**மட்/மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்தல்**

மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் புனருத்தாரன வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதால் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் 04.08.2010 ஆந்திகதி நடைபெறமாட்டாது.

உ. உதயஸ்ரீதர்,
பிரதேச செயலாளர்,
போரதீவுப்பற்று.

பிரதேச செயலகம்,
போரதீவுப்பற்று.

8- 580

---

எல். டீ. பி 3/32

**இலங்கையின் புகையிரத நலன்புரிச் சங்கத்தின் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 285)**

பிரிவு 15, இலங்கை புகையிரத நலன்புரிச் சங்கத்தால் விதிகள் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை புகையிரத நலன்புரிச் சங்கம்.

கொழும்பு.
2010...

**விதிகள்**

15 ஆம் பிரிவின் கீழ் விதிகளை இலங்கை நலன்புரிச் சங்கம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது 1953 ஆம் ஆண்டு மாசி மாதம் 06 ஆந்

திகதி இல. 10493 அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள, இவைகள் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டுள்ளது. மேலதிக திருத்தப்பட்டவைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. 11 ஆந் திகதி தை மாதம் 2008 ஆம் ஆண்டு 1532 ஆம் இலக்க விதி 9 இல் 4 ஆம் பந்தி நீக்கப்பட்டு விதி 9 சேர்க்கப்பட்டுள்ளது.

2. விதி 9A படி ஓய்வூதிய மேலதிகக் கொடுப்பனவு ரூபா நாற்பதாயிரம் அங்கத்தவர்கள் ஓய்வு பெறும் நேரத்தில் கொடுக்கப்பட வேண்டும். பிரிவு 2 இன்படி நாற்பதாயிரம் ரூபா ஒவ்வொரு அங்கத்தவரிடமிருந்தும் சமமாக அறவிட்டுக் கொள்ளப்படும்.

ஏற்கனவே ஓய்வு பெற்றவர்களிடமிருந்து இத்தொகை அறவிடப்படுவதில்லை என ஆலோசிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு வருடத்தை பூர்த்தி செய்யாத அங்கத்தவரிடமிருந்து இத்தொகை பெறப்படமாட்டாது.

3. இத்தொகை ஒவ்வொரு அங்கத்தவரிடமிருந்தும் மிக இறுக்கமாக பிரித்து ஐந்து தசமதானத்துக்கு அண்ணளவாக கணக்கிடப்பட்டு பெறப்படுகின்றது.

4. இவ் மேலதிகக் கொடுப்பனவுடன் மேலதிகமாக ஓய்வூதிய பணிக்கொடையும் ஓய்வூதியம் பெற ஒருவர் தகுதியுடையவராவார்.

5. 2008 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 27 ஆந் திகதியிலிருந்து விதி 9A நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

8-551

---

## 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டம்

25 ஆம், 26 ஆம் பிரிவுகளின் கீழ் அறிவித்தல்

1941 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினாலும் 1959 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1973 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கக் கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ், அதற்கான அட்டவணையில் உள்ள விண்ணப்பத்திற்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள கடன் கொடுத்தவருக்கும் கடனாளிக்கும் இடையில் இணக்கமொன்றினை ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொள்ள கடன் இணக்க சபை உத்தேசித்துள்ளது.

2. ஆதலின் சம்பந்தப்பட்ட கடன் கொடுத்தவர்கள், சபையின் முன் தோற்றுமாறு அவர்கள் தேவைப்படுத்தப்பட்ட தேதிக்கு முன்னர் கீழ்க் கண்ட கடனாளிகளிடமிருந்து தங்களுக்கு வருமதியாகவுள்ள கடன்களின் விவரங்களை சபைக்கு கொடுத்துதவுமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 25(1), 26(1) ஆகிய பிரிவுகளினது நியதிகளின்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

என். டபிள்யூ. குணதாச,
செயலாளர்,
கடன் இணக்க சபைத் திணைக்களம்.

கடன் இணக்க சபைத் திணைக்களம்,
இல. 428/11, வீர டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2010.08.04.

**அட்டவணை**

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (1) 41415 | திருமதி குருப்பு அச்சிலாகே தேவிகா பிரியங்கனீ, இல. 171/1, வெலிய வடக்கு, மினுவான்கொடை | திருமதி ஹெட்டிகே ஆஷா தர்ஷனீ வைஜயந்தி பெரேரா, இல. 150/3, வெலிய வடக்கு, மினுவான்கொடை. |
| (2) 41457 | திரு. சுபசிங்க பதிரென்கெலாகே ரவீந்திர புஷ்பகுமார பண்டார, மிரிஹதுகொட நாரம்மல. | திருமதி ஹேமலதா கொழும்ப கோனதூவ, இஸ்வெட்டியவத்த, நாரம்மல. |
| (3) 41484 | திரு. கொக்கல குருகே சுமனசிறி, இல. 531, "குருகே", விமலசார மாவத்தை, அகங்கம. | திரு. கல்பொக்க ஹேவாகே ரஞ்சித், "பேர்னாட்", கபலான வீதி, கதலுவ, அகங்கம. |

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (4) 41606 | திரு. லியனபண்டாரகே ருசிறு ஹேமந்த, இல. 431, பகல போமிரிய கடுவெல. | திரு. ரணசிங்க ஆரச்சிகே லக்மால் பிரசன்ன, இல. 137, வந்துராமுல்ல, கொரதொட்ட, கடுவெல. |
| (5) 41607 | திரு. சிங்கள பேடிகே செனெவிரத்ன திலகசிறி குமார, மாஹேனகம, வறக்காபொல. | திருமதி ரன்ஹொட்டி பேடிகே குமுது குமாரி, நாதெனிய, தெல்கமுவ, வறக்காப்பொல. |
| (6) 41613 | திருமதி ராஜபக்ஷ ஆரச்சிகே வயலட், இகல வவஹபிட்டிய, வெட்ட வீதி, நாத்தாண்டி. | திருமதி தொன் களுஆரச்சிகே லியுஜின் எத்தல் பிரீடா, இல. 34/8, ஹெரல்ட் ஹேரத் மாவத்தை, முதுகட்டுவ, மாறவில. |
| (7) 41638 | திரு. தர்மபால கங்கானமலாகே ரசிக சம்பத் ஸ்ரீ தர்மபால, ஜ1/122, களுகொந்தயாவ, மல்வான. | திரு. வசந்த யசபாலித ரணசிங்க, இல. 37/3, வட்ட மாவத்தை, பிலியந்தலை. |
| (8) 41639 | திரு. களுஆரச்சிலாகே சுபசிங்க, கனேபல்ல, தெலிகம | திரு. கல்கடுவராலலாகே ரஞ்சித் விஜேரத்ன, கனேபல்ல, துங்கிந்த, தெலிகம |

8-679

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் 4 ஆம் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி. (பதிவு இலக்கம் பிக்யூ116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கங்கள் : 242338, 385784, 438238, 466587, 510345 மற்றும் 510465 – கொசொண் இன்டஸ்றீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

26.05.2010 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது:-

"கடன் எடுத்த இலங்கை கம்பனி சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்டு பொல்கஸ்ஓவிட்ட,சியம்பலாகொட ஜயபியகம ரோட், இலக்கம் 157/B என்ற பதிவு செய்யப்பட்ட விலாசத்தில் அமைந்துள்ள கொசொண் இன்டஸ்றீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். கமகே 09.06.2005 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2932, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். டி. பி. எஸ். கருணாநாயக்கவின் 15.08.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 4119, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். ஏ. எம். என். ராஜசூரியவின் 07.04.2008 ஆந்திகதியுடைய முறி இலக்கம் 50, 25.08.2008 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 133 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாதலாலும் ; அத்துடன் மேற்படி முறிகள் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 30.03.2010 ஆந் திகதி வரை தற்சமயம் ரூபா 5,57,04,326 வருமதியாக உள்ளதாலும் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் மேற்படி முறி இலக்கங்கள் 2932, 4119, 50 மற்றும் 133 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி.க்கு இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஈடுவைக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத் தொகையான ரூபா 5,57,04,326 வுடன் 31.03.2010 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 1,63,31,000 பணத்தொகைக்கு ஆண்டொன்றுக்கு 20% சத வட்டியுடன் மேலும் ரூபா 89,20,000 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 21% சதவீத வட்டியுடன் ரூபா 1,99,10,000 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22% சத வட்டியுடன் விளம்பரச் செலவுகள், வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில் இலக்கம் 99 இல் உரிமம்பெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது."

### அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், உடகா பற்று சல்பிட்டி கோறளையில் ஹோமாகம பிரதேச சபை எல்லையில் வெணிவெலகொல கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எம். எம். எஸ். பெர்னாந்துவின் 09.06.1999 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 179 இல் காண்பிக்கப்பட்ட மாவத்தவத்த அல்லது அகலகெபுவத்த காணியின் பகுதிபடுத்திய காணி துண்டான லொட் 1 எல்லைகள் - வடகிழக்கு : லொட் 2 ; தென்கிழக்கு : லொட் 4 ; தென்மேற்கு : பிரதான ரோட் ; வடமேற்கு : வரைபடம் இலக்கம் :Co 5842 இல் லொட் 62. இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 28.37பே.) இக்காணி ஹோமாகம காணிப் பதிவகத்தில் N 353/213 இல் பதிவு செய்யப்பட்டது.

2. மேற்படி வெணிவெலகொல கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எம். எம். எஸ். பெர்னாந்து 09.06.1999 ஆந் திகதி வரையப்பட்ட வரைபடம் இலக்கம் 179 இல் காண்பிக்கப்பட்ட மாவத்தவத்த அல்லது அக்கலகேபுவத்த காணியின் லொட் 2 காணியின் எல்லைகள் - வடகிழக்கு : உலகாகொட்டுண கும்புர ; தென்கிழக்கு : லொட் 3 ; தென்மேற்கு : லொட் 4 மற்றும் 1 ; வடமேற்கு: லொட் 64, 63 மற்றும் லொட் 47 வரைபடம் இலக்கம் Co 5842 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 25.29பே.) இக்காணி ஹோமாகம காணிப் பதிவகத்தில் N 353/214 இல் பதிவுசெய்யப்பட்டது.

3. மேற்படி வெணிவெலகொல கிராமத்தில் அமைந்துள்ள மாவத்தவத்த அல்லது அக்கலகேபுவத்த காணியின் நிலஅளவையாளர் எம். எம். எஸ். பெர்னாந்துவின் 09.06.1999 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 179 இல் காண்பிக்கப்பட்ட லொட் 3 எல்லைகள் - வடகிழக்கு : உலகாகொட்டுவை கும்புர ; தென்கிழக்கு : லொட் 7, 8, மற்றும் 3 வரைபடம் இலக்கம் 4450 இன்படிமற்றும் ஒலபொவெகே கர்தேலிஸ் பெரேராவுக்கு சொந்தமான காணி ; தென்மேற்கு : பிரதான ரோட் ; வடமேற்கு : லொட் 4 மற்றும் 2. இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 1றூ. 36.29பே.) இக்காணி ஹோமாகம காணிப் பதிவகத்தில் N 353/215 இல் பதிவுசெய்யப்பட்டது.

இக் கீழ்ச் சொல்லப்பட்ட காணியூடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடன்:-

மேற்படி வெணிவெலகொல கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எம். எம். எஸ். பெர்னாந்துவின் 09.06.1999 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 179 இல் காண்பிக்கப்பட்ட மாவத்தவத்த அல்லது அக்கலகேபுவத்த காணியின் லொட் 4 எல்லைகள் - வடகிழக்கு : லொட் 1 ; தென்கிழக்கு : லொட் 3 ; தென்மேற்கு : பிரதான ரோட் ; வடமேற்கு : லொட் 1. இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 4பே.) இக்காணி ஹோமாகம காணிப் பதிவகத்தில் N 353/216 இல் பதிவுசெய்யப்பட்டது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

8-622

---

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

“கொரோனா இன்டநெசனல் (பிறைவேட்) லிமிட்டெட்” ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2007.07.04 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட “கொரோனா இன்டநெசனல் (பிறைவேட்) லிமிட்டெட்” எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது ‘‘கொரோனா இன்டநெசனல் (பிறைவேட்) லிமிட்டெட்’’ எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடா தென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 60537
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 02.

8- 555

---

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் 4 ஆம் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி. (பதிவு இலக்கம் பிக்யூ116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இலக்கம் : 1930013140
கடன் கணக்கு இலக்கம் : 294284, 352406 மற்றும் 445025 – ஸ்டார் லயின்

30.07.2009 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது:-

‘‘கடன் எடுத்த காணியை ஈடுவைத்த ஸ்டார் லயின் என்ற பெயரில் பங்குதாரர்களாக வியாபாரம் செய்யும் விதானகே தொனா நில்மினி விசாகா ஜயவர்தன மற்றும் கல்பி சமண்தா ஜயவர்தன என்பவர்கள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எல். ஜயவீரவின் 19.08.2008 ஆந்திகதியுடைய முறி இலக்கம் 2774 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு செலுத்த வேண்டிய கொடுப்பன வில் தவறுகை புரிந்துள்ளதாதலாலும் ; அத்துடன் 03.06.2009 ஆந் திகதிவரை மேற்படி முறி பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ க்கு ரூபா 1,12,77,532.78 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் உள்ள அதிகாரத்தின் படி

மேற்படி சொல்லப்பட்ட முறி இலக்கம் 2774 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி.க்கு இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஈடுவைக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 1,12,77,532.78 பணத்தொகையுடன் 04.06.2009 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 57,22,003 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 29% சத வட்டியுடன் ரூபா 25,10,070 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 9% சதவட்டியுடன் ரூபா 4, 21,875 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22% சதவீத வட்டியுடன் ரூபா 22,08,331 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 23% சத வட்டியுடன் விளம்பரச் செலவுகள், வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில் இலக்கம் 99 உரிமம்பெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்ட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது.''

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பற்று சல்பிட்டி கோறளையில் தெஹிவளை- கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லையில் அத்திட்டிய வாட் இலக்கம் 25 இல் அத்தியட்டிய கிராமத்தில் கட்டிடங்கள் இலக்கங்கள் 44 மற்றும் 44/1 கெமுனு மாவத்த (முன்பு மந்திரிமுல்ல ரோட்) கட்டிடங்கள் அமைந்துள்ள கோண்காவத்த அல்லது குஸ்சியாவத்த காணியின் நிலஅளவையாளர் ஜி. எல். பி. நானாயக்காரவின் 27.10.1990 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 9129 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1 ; காணியின் எல்லைகள் வடக்கு: பிரத்தியேக (பிறைவேட்) ரோட் ; கிழக்கு : லொட் 2 ; தெற்கு : லொட் 5 (10 அடி அகலம் ரோட்); மேற்கு : துமுனு மாவத்தை இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 26பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 9129 இன்படி இக்காணி தெல்கந்த -நுகேகொடை காணி பதிவகத்தில் M 3037/242 பதிவு செய்யப்பட்டது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

8-623

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

''பிசினஸ் கன்சல்டன்ஸ் என்ட் சேர்விசஸ் புரவைடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2008.06.02 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட ''பிசினஸ் கன்சல்டன்ஸ் என்ட் சேர்விசஸ் பிரவைடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் ''பிசினஸ் கன்சல்டன்ஸ் என்ட் சேர்விசஸ் பிரவைடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 64299
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 26.

8- 556

---

**தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ**

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2010, மாச்சு 13 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது:-

''(கடன்பெறுநர்களான) ஹலோலுவ, பஹல தூல்வள, 208 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த தூல்வல விதானெலா கெதர சரத் குமார தூல்வல மற்றும் சம்பா சுதர்ஷனி விஜேசிங்க என்போர் (முன்னர் தேசிய அபிவிருத்தி (வங்கி) லிமிட்டெட் ஆகவிருந்த (வங்கி) தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் சார்பில் கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) ஜீ. ஜீ. கரலியத்த அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009.04.01 ஆந் திகதிய 471 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும்,

அத்துடன், 2010, பெப்புருவரி 28 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஆறு இலட்சத்து எழுபத்துமூவாயிரத்து எழுநூற்று எண்பத்தொரு ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூ. 6,73,781.94) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறியின் மீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் வந்துள்ளதாதலாலும்,

வங்கியின் பணிப்பாளர் சபையானது 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கி களினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட பணத்தொகையான ஆறு இலட்சத்து எழுபத்துமூவாயிரத்து எழு நூற்று எண்பத்தொரு ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூ. 6,73,781.94) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும் சொல்லப்பட்ட முறியின் மீது வருமதியான பிரதான தொகையான

ஆறு இலட்சத்து எழுபதாயிரத்து முந்நூற்று நாற்பத்து மூன்று ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூ. 6,70,343.94) கொண்ட தொகைமீது 2010, மாச்சு 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை, ஆண்டொன்றுக்கு இருபத்திரண்டு வீதப்படி (22%) வருமதியான வட்டியையும் அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறி மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் உத்தரவுபெற்ற ஏலதாரர்களான திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் காணிப் பதிவுப் பிரிவினுள் கங்கபட பத்து சியன கோறளை மில்லெட் கிராமத்தில் அமைந்துள்ளதும், கிரியெல்ல வத்தவிலிருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. ஆர். பதிராஜா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.02.09 ஆந் திகதிய 3560 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 354 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 354 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : காணித்துண்டம் 355 ; கிழக்கில் : காணித்துண்டம் 136 ; தெற்கில் : காணித்துண்டம் 351 மற்றும் ; மேற்கில் : காணித்துண்டம் 353. பரப்பளவில் இது அதன்மீதுள்ள மண், பயிரக்ள் மற்றும் எல்லாவற்றுடனும் பதின்மூன்று தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.20பே.) கொண்டுள்ளதுடன், கம்பஹா காணிப் பதிவகத்தில் டீ 433/202 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

8-627/1

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

''யொசீடா சோகன் ஜீ இன்டனெசனல் (பிறைவேட்) லிமிட்டெட்'' ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2007.12.07 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட ''யொசீடா சோகன் ஜீ இன்டனெசனல் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது ''யொசீடா சோகன் ஜீ இன்டனெசனல் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 62316
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 26.

8- 557

---

**தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ**

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2010, மாச்சு 13 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது:-

''(கடன்பெறுநரான) கொழும்பு 14 ஐச் சேர்ந்த டுவான் நஸ்வின் ப்ரனுதீன் என்பவர் (முன்னர் தேசிய அபிவிருத்தி (வங்கி) ஆகவிருந்த தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) டபிள்யூ. எச். ஐ. மல்காந்தி அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.09.02 ஆந் திகதிய 29 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும்,

அத்துடன், 2010, பெப்புருவரி 28 ஆந் திகதியன்றுள்ளவாறாக இருபத்தொரு இலட்சத்து பதின்நான்காயிரத்து எண்ணூற்று எண்பத்தேழு ரூபா எழுபத்தேழு சதம் (ரூ. 21,14,887.77) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறியின் மீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் வந்துள்ளதாதலாலும்,

வங்கியின் பணிப்பாளர் சபையானது 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட பணத்தொகையான இருபத்தொரு இலட்சத்து பதின்நான்காயிரத்து எண்ணூற்று எண்பத்தேழு ரூபா எழுபத்தேழு சதம் (ரூ. 21,14,887.77) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும் சொல்லப்பட்ட முறியின் மீது வருமதியான பிரதான தொகையான இருபத்தொரு இலட்சத்து இரண்டாயிரத்து நூற்று யிருபத்தேழு ரூபா எழுபத்தேழு

சதம் (ரூ. 21,02,127.77) கொண்ட தொகைமீது 2010, மாச்சு 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை, ஆண்டொன்றுக்கு இருபது வீதப்படி (20%) வருமதியான வட்டியையும் அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறி மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் உத்தரவுபெற்ற ஏலதாரர்களான திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

#### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்திலுள்ள சியன கோறளையின் அதிகாரிபத்துவில் மஹர பிரதேச சபை எல்லைகளினுள் மஹர கெந்தலியத்த பளுவவில் அல்லது மஹர நுகேகொடையில் அமைந்துள்ளதும், தெல்கஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். எம். எஸ். பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2008.03.13 ஆந் திகதிய 3075 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 01 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக் கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 01 பின்வரும் எல்லைகளையுடையது - வடகிழக்கில் : பிரதேச சபை வீதி; தென்கிழக்கில் : திரு. லிவினிஸ் அப்புவின் மரபுரிமையாளர்களினது காணி; தென்மேற்கில் : நெல்வயலையும் ஓவிட்டவையும் தனிவேறாக்குகின்ற 4 1/2 அடி அகலமான நீர்வழி ; மற்றும் வடமேற்கில் : முன்னர் ஜீ. டி. சுமணதாசவுக்குச் சொந்தமான காணி ; பரப்பளவில் இது வீட்டுடனும் அதன்மீதுள்ள வேறெல்லா வற்றுடனும் முப்பத்திரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 32பே.) கொண்டுள்ளது. இது கம்பஹா காணிப் பதிவகத்தில் சீ 873/78 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

8-627/2

---

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"ஸ்கை லைன் டிவலொபர்ஸ் ஐ என் வீ (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2007.05.22 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ஸ்கை லைன் டிவலொபர்ஸ் ஐ என் வீ (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "ஸ்கை டிவலொபர்ஸ் ஐ என் வீ (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டி லிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

பீவி 60037
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 29.

8- 559

---

### மக்கள் வங்கி - காலி கோட்டைக் கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2010.02.26 ஆந் திகதி மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"காலி பிரசித்த நொத்தாரிசு சோமபால ஹொரதுகொட கமகே என்பவரால் 2004.06.24 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 400 என்ற காலி பிரசித்த நொத்தாரிசு எம். ஜீ. ஸீ அரோசினி என்பவரால் 2005.04.18 ஆந் திகதிய எழுதி அத்தாட்சிப்படுத்தியதும் இலக்கம் 234 என்ற ஈட்டு முறிகளின் பிரகாரம் கொடுப்பனவில் பிரஸாத் திசாநாயக்க என்பவர் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால், இப்பொழுது மேற்படி முறியின் மீது மூன்று இலட்சம் ரூபா (ரூ. 3,00,000) பணம் மற்றும் நாலு இலட்சத்து இருபத்தோரயிரத்து முந்நூற்று முப்பத்தொன்பது ரூபா எண்பத்தைந்து சதம் (ரூபா 4,21,339.85) மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ளபடியால் 2008.01.01 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு 18.25% வீதப்படி மூன்று இலட்சம் ரூபா (ரூ. 3,00,000) பணம் மற்றும் 2009.07.01 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்கு (17.25%) ப்படி நாலு இலட்சத்து இருபத்தோரயிரத்து முந்நூற்று முப்பத்தொன்பது ரூபா எண்பத்தைந்து சதம் (ரூபா 4,21,339.85) பணம் ஏலவிற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் (29L) 29எல் பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து மூன்று இலட்சம் ரூபா (ரூ. 3,00,000) பணம் மற்றும் நாலு இலட்சத்து இருபத்தோரயிரத்து முந்நூற்று முப்பத்தொன்பது ரூபா எண்பத்தைந்து சதம் (ரூபா 4,21,339.85) பணம் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜி. பி. ஆனந்த என்பவரால் இலக்கம் 400 மற்றும் 234 என்ற ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென

*மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் தீர்மானிக்கின்றது."*

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டம், காலிப் பெரும் பகுதிக்குள் மற்றும் நகர சபை எல்லைக்குள் காலி சீன கொரடுவையில் அமைந்துள்ள சீன கொரடுவை கிராமத்தில் கம்மான வீதியில் வரிப்பண இலக்கம் 54 என்ற செகிரிபொக்கவத்த அல்லது ரோஸ்வோர்க் என்ற காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் ஜீ. எச். ஜீ. ஏ.ஏ. த சில்வா என்பவரால் 1994.04.24 ஆந் திகதி அளந்து தயாரித்த இலக்கம் 1820 என்ற வரைபடத்தின் பிரகாரம் லெர் ''ஏ'' அல்லது லொட் 08 என்ற துண்டுக்கான எல்லைகள் - வடக்கிற்கு : இக்காணியின் லொட் 09 உம் ; கிழக்கிற்கு : சிறு வீதியும் ; தெற்கிற்கு : இக்காணியின் லொட் 07உம் ; மேற்கிற்கு : ஏ. எச். அனோலிஸ் முதலாளிக்கு சொந்தமான காணியும் இதன் எல்லைகளாகும். இந்த நான்கு எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் ஏழு தசம் ஒன்று எட்டு மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 7.183பே.) விஸ்தீரணம் கொண்ட இக்காணியுள் அதில் அமைந்துள்ள கட்டடங்கள், மரம் மட்டைகள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும். இக்காணி காணி காலி மாவட்ட காணிப்பதிவகத்தில் இலக்கம் ஏ 528/189 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்ஸன் வீதி,
காலி.

8-631

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

''யுனிவசல் கொஸ்மடிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2009.01.01 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட ''யுனிவசல் கொஸ்மடிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது ''யுனிவசல் கொஸ்மடிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடா தென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 66673
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 30.

8- 560

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

''டீனில் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்'' ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2007.05.23 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட ''டீனில் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது ''டீனில் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென் பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

பீவி 60048
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 30.

8- 561

---

**இ. அ. நி. கூ. வங்கி**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின்

பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''நுகேகொடையைச் சேர்ந்த ரவீந்திர டயஸ் சமரசேக்கர என்பவர், இ. அ. நி. கூ. வங்கி சார்பில் மாத்தறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். அபேவிக்ரம என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.06.25 ஆந் திகதிய 305 ஆம் மற்றும் 2009.04.07 ஆந் திகதிய 407 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், மேற்கூறப்பட்ட 305 ஆம், 407 ஆம் இலக்கங்களைக் கொண்ட ஈட்டுமுறிகளின் மீது 2010, யூன் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாகப் ஒரு கோடி முப்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்தையாயிரத்து எண்ணூற்று நாற்பத்தொரு ரூபா தொண்ணூற்று மூன்று சதம் (ரூ. 1,39,45,841.93) கொண்ட தொகையும் 2010, யூலை 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒரு கோடி முப்பத்தைந்து இலட்சத்து முப்பத்தோராயிரத்து அறுநூற்று அறுபத்தாறு ரூபா (ரூ. 1,35,31,666) கொண்ட தொகை மீது மீளாய்வுத் தேதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்ந்ததாக விருக்கும் வட்டி வீதங்களும் ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) விளிம்பும்.

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதம் (சஎபிவீ); அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்,

மேலேயுள்ள அடிப்படை வீதங்கள் மீளாய்வுக்கமையுமென்பதுடன், ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும், சொல்லப்பட்ட ரவீந்திர டயஸ் சமரசேக்கர என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்.

இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப் பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 305 ஆம், 407 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதுள்ள கட்டிடங்களையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஒரு கோடி முப்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்தையாயிரத்து எண்ணூற்று நாற்பத்தொரு ரூபா தொண்ணூற்று மூன்று சதம் (ரூ. 1,39,45,841.93) கொண்ட தொகையும் 2010, யூலை 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒரு கோடி முப்பத்தைந்து இலட்சத்து முப்பத்தோராயிரத்து அறுநூற்று அறுபத்தாறு ரூபா (ரூ. 1,35,31,666) கொண்ட தொகை மீது மீளாய்வுத் தேதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்ந்ததாகவிருக்கும் வட்டி வீதங்களும் ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) விளிம்பும்.

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதம் (சஎபிவீ) ; அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்,

மேலேயுள்ள அடிப்படை வீதங்ளக் மீளாய்வுக்கமையுமென்பதுடன், ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 305 ஆம், 407 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**305 ஆம், 407 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்திலுள்ள பஸ்துன் கோறளை கிழகின் கங்கபொட பத்துவில் போத்தலே கிராமத்தில் அமைந்துள்ளதும், டுபகெலிகுபுரதெனிய, பொல்கஹாகந்த, கொரக்காதுர முக்கலான மற்றும் பொல்கஹாமுக்கலான என்பவற்றிக்காக இ. கி. வ. 147 இலுள்ள காணித்துண்டும் 662 எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2008.05.11 ஆந் திகதிய 5053/ 9000 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக் காட்டப்பட்டதும், வரையறுக்கப்பட்ட காணித்துண்டம் 662ஏ இனதாய் அதன்மீதுள்ள எல்லாப் பயிர்களுடனும், கட்டிடங்களுடனும், கட்டிடங்களுடனும், வேறெல்லாவற்றுடனுமான மண்ணில் அம்முழுமை அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில்: எகல்ல-இங்கிரிய வீதி, 5053/ 9000 ஆம் இலக்க வரைபடத்தின்படி காணித்துண்டம் 662பி இ. கி. வ. 147 இன்படி காணித்துண்டம் 418; கிழக்கில் : 5053/9000 ஆம் இலக்க வரைபடத்தின்படி காணித்துண்டம் 662பி மற்றும் இ. கி. வ. 147 இன்படி காணித்துண்டம் 418 மற்றும் 675 ; தெற்கில் : இ. கி. வ. 147 இன்படி காணித்துண்டம் 675 மற்றும் ; மேற்கில் : ஹேமபால ஜயசிங்கவினால் உரிமைகோரப்பட்ட காணி, இ. கி. வ. 147 இன்படி காணித்துண்டம் 675; பரப்பளவில் இது மேற்கூறப்பட்ட 5053/ 9000 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத் தின்படி மூன்று றூட் ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 3றூ. 9பே.) கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட காணித்துண்டு பின்வரும் காணியின் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட பாகமாகுமென்பதுடன் அதனோடு தோதான முறையில் தொடர்புபட்டதாகப் பதிவு செய்யப்படுதலும் வேண்டும்:-

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்திலுள்ள பஸ்துன் கோறளை கிழகின் கங்கபொட பத்துவில் போத்தலே கிராமத்தில் அமைந்துள்ளதும், டுபகெலிகுபுரதெனிய, பொல்கஹாகந்த, கொரக்காதுர முக்கலான மற்றும் பொல்கஹாமுக்கலான எனவழைக்கப்படும் காணியினதாய் நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட 147 ஆம் இலக்க இறுதிக் கிராம வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டம் 662 இனதாய் அதன்மீதுள்ள எல்லாப் பயிர்களுடனும்,

எல்லாவற்றுடனுமான மண்ணில் அம்முழுமை அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 662 பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கில் : இ. கி. வ. 147 இன்படி காணித்துண்டம் 661 ; கிழக்கில் : இ. கி. வ. 147 இன்படி காணித்துண்டங்கள் 417 மற்றும் 418 ; தெற்கில்: வீதி (அல்லது இ. கி. வ. 147 இன்படி காணித்துண்டம் 675 எனவறியப்படும்) மற்றும் ; மேற்கில் : வீதி (அல்லது இ. கி. வ. 147 இன்படி காணித்துண்டம் 675 எனவறியப்படும்); பரப்பளவில் இது ஒரு ஏக்கர் ஒரு றூட் பன்னிரண்டு பேர்ச்சஸ்கள் (1ஏ. 1றூ. 12பே.) கொண்டுள்ளதுடன், மத்துகம காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

8-646

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : P010000014
கடனாளியின் முழுப்பெயர் : கச்சகடுவகே பிரியந்தி கோதமி ஜினசேன மற்றும் கச்சகடுவகே தர்மபால பீரிஸ்

"கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். சீ. பெரேரா என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 914 ஆம் இலக்கத்தையும் 2007.11.01 ஆந் திகதியையும் கொண்ட அடகுப் பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு 'வங்கி' என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு பெற்றுக்கொண்ட கடனை வங்கிக்கு செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் கீழ் ஒரு கோடியே தொண்ணூற்றாறு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்த நாநூற்று பத்தொன்பது ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூபா 1,96,63,419.64) 2009.06.30 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்-

1. குறிப்பிட்ட கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான ஒரு கோடி அறுபது இலட்சம் ரூபாவினையும் (ரூபா 1,60,00,000) அதற்கான 2009.06.30 ஆந் திகதி வரையிலான வட்டியாக முப்பத்தாறு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்து நாநூற்று பத்தொன்பது ரூபா அறுபத்து நான்கு சதத்தினையும் (ரூபா 36,63,419.64) இதன்படி மொத்தமாக ஒரு கோடியே தொண்ணூற்றாறு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்த நாநூற்று பத்தொன்பது ரூபா அறுபத்து நான்கு சதத்தினை (ரூபா 1,96,63,419.64) அறவீடு செய்யவும் ;

2. குறிப்பிட்ட ஒரு கோடி அறுபது இலட்சம் ரூபாவினையும் (ரூபா 1,60,00,000) அறவீடு செய்ய வேண்டிய 26.00 வீதமான வருடாந்த வட்டியினை 2009.07.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும் ;

3. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு)

மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யு. எம். விக்ரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்தல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது."

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோறளையில், பல்லே பத்துவவில், தெஹிவல கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லையில் இரத்மலானை தெற்கில் பிரிவு 25 இல் செத்சிரி மாவத்தையில் வரிமதிப்பீட்டிலக்கம் 26 இல் அமைந்துள்ள கந்தவல வத்துயாய என்ற காணிக்கு 1987.06.18 ஆந் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டபிள்யு. தந்தநாராயண என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1339 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி X என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாவன - வடக்கே : 24, 24/1, 24/2 ஆகிய வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட செத்சிரி மாவத்தையில் அமைந்துள்ள ஆதனமும்; கிழக்கே : செத்சிரி மாவத்தையைக் கொண்ட ஆதனமும்; தெற்கே : செத்சிரி மாவத்தையும்; மேற்கே : வரிமதிப்பீட்டு இலக்கம் 32 ஐ கொண்ட செத்சிரி மாவத்தையில் அமைந்துள்ள ஆதனமும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணியின் பரப்பளவு ஒரு றூட் மூன்று தசம் ஆறு இரண்டு பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 1றூ. 3.62பே.) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம், மரங்கள் மற்றும் ஏனைய அனைத்துடன் 8 ஆம் இலக்க காணித்துண்டின் பாதைக்கான உரிமையும் தெல்கந்த-நுகேகொட காணிப் பதிவு அலுவலகத்தில் M 3094/116 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

8-697

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"பூஜி லங்கா மோடர் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2007.08.31 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "பூஜி லங்கா மோடர் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "பூஜி லங்கா மோடர் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

பீவி 61225
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 30.

8- 562

---

**வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி (பீஎல்சீ)**
[பதிவு இல. PQ 118]

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சி (பதிவு இல. PQ 118) பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

கொருவகே ரவீந்திர மாதவ பெர்னாண்டோ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் [பதிவு இல. PQ 118] பணிப்பாளர்கள் சபையால் 2010, யூன் 30 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"வாதுவ, காலி வீதி, 649 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கொருவகே ரவீந்திர மாதவ பெர்னாண்டோ (இதனகத்துப்பின்னர் "ஈடுவைத்தவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஹெந்தவிதாரனகேசந்திரகுமார் டீ சில்வா அத்தாட்சிப்படுத்திய 2005, ஒகத்து 16 ஆந் திகதிகொண்ட 358 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் இல. 76, யோர்க் வீதி, கொழும்பு 1,) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் சார்பில் (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்டது) மேற்படி ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும்,

சொல்லப்பட்ட ஈடுவைத்தவர் மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன் வசதிகளின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது 06.05.2010 ஆந் திகதியன்றுள்ளவாறு பதினாறு இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து இருநூற்று முப்பத்துமூன்று ரூபா அறுபது சதம் (ரூ. 16,22,233.60) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ள தலாலும்,

பதினாறு இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து இருநூற்று முப்பத்துமூன்று ரூபா அறுபது சதம் (ரூ. 16,22,233.60) வீடமைப்புக் கடன் மீது 06.05.2010 ஆந் திகதியன்றுள்ளவாறு நிலுவையிருக்கும் முதல் பதினான்கு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து அறுநூற்று இருபத்தொரு ரூபா எழுபத்திரண்டு சதம் (ரூ. 14,51,621.72) 07.05.2010 முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 24.00% சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச் சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் திரிவங்க அன்ட் சேனாநாயக்க ஆக்ஷனியர்ஸ் திரு. எம். டப். திரிவங்க சரித் சேனாநாயக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொடடமுனை, வாது-வஸ்கடு தேபெந்தயில் மஹா வாதுவையில் (மேலும் சரியாக மஹா வாதுவ கிழக்கு) அமைந்துள்ளதும் "கெற்றகெரெல்லகஹாவத்த" என அழைக்கப்படுவதுமான காணியில் துண்டு C என்பதன் துண்டு2 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு முழுவதும் (1367 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு C என்பதன் உட்பிரிவும்). மேற்படி துண்டு 2 என்பதற்கு எல்லைகளாக – வடக்கில் : ஜே. ரொசலின் பெர்னாண்டோவிற்குரிய 645 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட 1367 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு B ; கிழக்கில் : சந்திரநாத் குணவரத்ன என்பவருக்குமுரிய 1367 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு D ; தெற்கில் : இந்த வரைபடத்திலுள்ள துண்டு 1 ; மேற்கில் : கொழும்பு – காலி பெருந்தெரு என்பன அமைந்துள்ளன. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. கருணாரத்ன கொஸ்தா தயாரித்த 1987, ஒற்றோபர் 3 ஆந் திகதிகொண்ட 728 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டவாறு இதன் பரப்பளவு பதின்மூன்று தசம் ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.6பே.). இது பாணந்துறை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் G 73/281 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மைய நிலஅளவையின்படி மேற்படி துண்டு C என்பதன் துண்டு 2 பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:-

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனை, வாது-வஸ்கடு தேபெந்தயில் பாணந்துறை பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட மஹா வாதுவையில் அமைந்துள்ளதும் காலி வீதி 649 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் “கெற்றகெரெல்லகஹாவத்த” என அழைக்கப்படுவதுமான காணியில் துண்டு A என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு முழுவதும் (728 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு C என்பதன் துண்டு 2 இன் மறு நிலஅளவை). மேற்படி துண்டு A என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : 1367 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு B ; கிழக்கில் : 1367 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு D ; தெற்கில் : 728 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 1 ; மேற்கில் : கொழும்பு - காலி பெருந்தெரு என்பன அமைந்துள்ளன. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். ஆர். ஜயசேகர தயாரித்த 2003, ஒற்றோபர் 13 ஆந் திகதி கொண்ட 3460 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டவாறு இதன் பரப்பளவு பன்னிரண்டு தசம் ஐந்து சைவர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 12.50பே.) அல்லது 0.0316 ஹெக்டேயர்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

8-682

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**
(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(அநுராதபுரம் கிளை) - டொன் மகேஷ் அத்தகசே

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் .-

“டொன் மகேஷ் அத்தலகே கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு ஏ. வி. ஏ. திசாநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, ஒற்றோபர் 25 ஆந் திகதியிடப்பட்ட 3979 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2010, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஐந்து இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று ஒரு ரூபா எழுபத்துமூன்று சதம் (ரூ. 5,29,991.73) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 3979 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 5,29,991.73 பணத்தொகையை 2010, மே 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.”

**அட்டவணை**

வடமத்திய மாகாணம், அனுராதபுரம் நிர்வாக மாவட்டத்தின் நுவரகம் பலாத்த கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கந்தர கோறளவின் கிராம சேவகர் பிரிவு இலக்கம் 240 அத்திக்குளம் கிராமத்தில் உள்ள, பகிரப்பட்ட அரச காணியின் எல்லைகள் - வடக்கு : ரத்னபாலவின் காணி ; கிழக்கு : சோமதாசவின் காணி ; தெற்கு : ரொசலின் நோனாவின் காணி ; மேற்கு : நுவரவெவ வீதியுடனான ஒதுக்கீடு. அத்துடன் அனுராதபுரம் மாவட்ட காணிப் பதிவகத்தில் L. D. O. 529/87 என்ற தொகுதி பக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட, நாற்பது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 40பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன் முன்சொல்லப்பட்ட காணி மீள நிலஅளவை செய்யப்பட்டது. உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ரி. பி. ஆரியசேனவினால் தயாரிக்கப்பட்ட 2005.06.10 ஆந் திகதியிடப்பட்ட 2083 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்டதன் எல்லைகள் - வடக்கு : ரத்னபாலவின் காணி ; கிழக்கு : சோமதாசவின் காணி ; தெற்கு : ரொசலின் நோனாவின் காணி; மேற்கு : நுவரவெவவிற்குச் செல்லும் வீதி. அத்துடன், பூஜ்யம் தசம் பூஜ்யம் எட்டு ஆறு ஹெக்டயர்கள் (0.086 ஹெக்.) அல்லது முப்பத்து நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 34பே.) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-693/1

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**
(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(அநுராதபுரம் கிளை) - தலகஹாமுல கெதர குசுமா நந்தனி மற்றும் சத்துருசிங்க ஆராச்சிலாகே தூமிந்த ஸ்ரீ லலித் வீரசிங்க

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட

கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் .-

"தலகஹாமுல கெதர குசுமா நந்தனி மற்றும் சத்துருசிங்க ஆராச்சிலாகே துமிந்த ஸ்ரீ லலித் வீரசிங்க கடப்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு ஏ. வி. ஏ. திசாநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, ஏப்பிறல் 01 ஆந் திகதியிடப்பட்ட 2817, 2004, ஏப்பிறல் 08 ஆந் திகதியிடப்பட்ட 3218 மற்றும் 2008, ஏப்பிறல் 28 ஆந் திகதியிடப்பட்ட 5354 என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2010, சனவரி 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது இருபத்து நான்கு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து தொளாயிரத்து முப்பத்தெட்டு ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 24,44,938.21) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 2817, 3218 மற்றும் 5354 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 24,44,938.21 பணத்தொகையை 2010, பெப்புருவரி 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக் கப்படுகின்றது."

**அட்டவணை**

1. வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டத்தின் கந்து துலன, நுவரகம் பலாத்த, மடவலகம கந்தர கோறளவில் உள்ள LSPP இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள மடவலகம, முக்கலன, குக்குள்கட்டுதமன, பொத்தன, கொங்கஹாயாய, கொங்கஹ முக்கலான, ஹிக்கல, லண்டுகெல, பலுகஹாலந்த, வீஹேன, திஸ்பம்பே கீரியகஹாலந்த மற்றும் பலுவ முக்கலான என அழைக்கப்படும் பிரிக்கப்படாத பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : LSPP 3 இன் காணித்துண்டு 257 இன் மிகுதியான பகுதி மற்றும் காணித்துண்டு 262A ; கிழக்கு : மடவலகம அணைக்கட்டு மற்றும் நீர்ப்பாசன கால்வாய் HLD3 ; தெற்கு : : ISPP 3 இன் காணித்துண்டுகள் 262B மற்றும் 262 ; மேற்கு : LSPP 3 இன் காணித்துண்டு 262. நாற்பத்து இரண்டு ஏக்கர்கள் (42ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்டதும், அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். ஏ. சந்திரரட்னவினால் தயாரிக்கப்பட்ட 1981, யூலை 5 ஆந் திகதியிடப்பட்ட 1493 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 1D, என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : 1493 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்தண்டு 1C ; கிழக்கு : சொல்லப்பட்ட 1493 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1E மற்றும் 1A ; தெற்கு : காணித்துண்டு 262; மேற்கு : இறுதி கிராம வரைபடத்தின் காணித்துண்டு 262. அத்துடன் இரண்டு ஏக்கர்கள் ஒரு றூட் மற்றும் 22 பேர்ச்சுகள் (2ஏ. 1றூ. 22பே.) விஸ்தீரணத்துடனான எல்லாவற்றையும் கொண்ட ஆதனம்.

2. முன் சொல்லப்பட்ட மெதவல்கமவில் உள்ள அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியின் பகிரப்பட்டதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். ஏ. சந்திரரட்னவினால் தயாரிக்கப்பட்ட 1981, யூலை 5 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1E என அடையாளம் இடப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : சொல்லப்பட்ட 1493 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1C ; கிழக்கு : 3506 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2 மற்றும் இறுதி கிராம வரைபடங்களில் உள்ள காணித்துண்டு 262; தெற்கு : இறுதி கிராம வரைபடங்களில் உள்ள காணித்துண்டு 262 ; மேற்கு : சொல்லப்பட்ட 1493 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1D; அத்துடன் இரண்டு ஏக்கர்கள் ஒரு றூட் மற்றும் 22 பேர்ச்சுகள் (2ஏ. 1றூ. 22பே.) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்டது.

**இரண்டாவது அட்டவணை**

வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டத்தின் கந்து துலான, நுவரகம் பலாத்த, மடவலகம கந்தர கோறளவில் உள்ள L.S.P.P மடவலகம, முக்கலான, குக்குள்கட்டுதமன, பொத்தன இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள மடவலகம், முக்கலாந்த, , குக்குள்கட்டுதமன, பொத்தன, கொங்கஹாயாய, கொங்கஹ முக்கலான, ஹிக்கல, லண்டுகெல, பலுகஹாலந்த, வீஹேன, திஸ்பம்பே கீரியகஹாலந்த மற்றும் பலுவ முக்கலான என அழைக்கப்படும் பிரிக்கப்படாத பகிரப்பட்ட காணியின் எல்லைகள்- வடக்கு :262A இன் மிகுதியான பகுதி மற்றும் LSPP 3 இன் காணித்துண்டு 257 இன் மிகுதியான பகுதி; கிழக்கு : மடவலகம அணைக்கட்டு மற்றும் நீர்ப்பாசன கால்வாய் HLD3; தெற்கு : ISPP 3 இன் காணித்துண்டுகள் 262, B மற்றும் 262 ; மேற்கு: ISPP3 இன் காணித்துண்டு 262, நாற்பத்திரண்டு ஏக்கர்கள் (42ஏ. 0று. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனம். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். ஏ. சந்திரரட்னவினால் தயாரிக்கப்பட்ட 1981, யூலை 5 ஆந் திகதியிடப்பட்ட 1493 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 1C, என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 1B ; கிழக்கு : காணித்துண்டு 1A வீதிக்கான ஒதுக்கீடு ; தெற்கு : காணித்துண்டு 1A மற்றும் காணித்துண்டு 1D ; மேற்கு : இறுதி கிராம வரைபடத்தின் காணித்துண்டு 262. அத்துடன் ஐந்து ஏக்கர்கள் (5ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணத்துடனான பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றையும் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-693/2

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"டெக்னோபிளஸ் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2009.08.14 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "டெக்னோபிளஸ் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம்

மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது ''டெக்னோபிளஸ் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 68805
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 29.

8- 563

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(அநுராதபுரம் கிளை) - சத்துருசிங்க ஆராச்சிலாகே துமிந்த ஸ்ரீ லலித் வீரசிங்க

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் .-

''சத்துருசிங்க ஆராச்சிலாகே துமிந்த ஸ்ரீ லலித் வீரசிங்க கடப்பாடுடையவர் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு ஏ. வி. ஏ. திசாநாயக்காவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, மாச்சு 15 ஆந் திகதியிடப்பட்ட 4826 ஆம் இலக்க முறிக்கு (இத்துடனான முதலாவது அட்டவணையில் ஆதனம் குறித்து மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது) அமைய 2010, சனவரி 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது இருபத்தொரு இலட்சத்து அறுபதாயிரத்து முந்நூற்று எண்பத்துமூன்று ரூபா முப்பத்தொன்பது சதம் (ரூபா 21,60,383.39) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளன.

அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு என். எதிரிசிங்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001, யூலை 16 ஆந் திகதியிடப்பட்ட 12110 ஆம் இலக்க முறி மற்றும் அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு ஏ. வி. ஏ. திசாநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறிகளான 2003, யூலை 31 ஆந் திகதியிடப்பட்ட 2929, 2003, திசெம்பர் 4 ஆந் திகதியிடப்பட்ட 3048, 2003, திசெம்பர் 17 ஆந் திகதியிடப்பட்ட 3062 மற்றும் 2007, ஒற்றோபர் 1 ஆந் திகதியிடப்பட்ட 5086 என்பனவிற்கு அமைவாக (இத்துடனான இரண்டாவது அட்டவணையில் ஆதனம் குறித்து மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது) 2010, சனவரி 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஐம்பத்திரண்டு இலட்சத்து ஆறாயிரத்து இருநூற்று எழுபத்திரண்டு ரூபா எண்பத்தெட்டு சதம் (ரூபா 52,06,272.88) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளன.

அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான முதலாம் மற்றும் இரண்டாம் அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 4826, 12110, 2929, 3048, 3062 மற்றும் 5086 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட எழுபத்துமூன்று இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூற்று ஐம்பத்தாறு ரூபா இருபத்தேழு சதம் (ரூ. 73,66,656.27) பணத்தொகையை 2010, பெப்புருவரி 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின், ஹேவாகம் கோறளை, பள்ளே பற்றுவின் மாலபேயில் உள்ள கிரிபற்ன்கஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. விஜயசூரியவினால் தயாரிக்கப்பட்ட 1982, ஏப்பிறல் 20 ஆந் திகதியிடப்பட்ட 1690 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 13ஏ என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. விஜயசூரியவினால் தயாரிக்கப்பட்ட 1689 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டுகள் 17 மற்றும் 18 ; கிழக்கு : முன் சொல்லப்பட்ட 1689 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 20 ; தெற்கு : சொல்லப்பட்ட 1690 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 13B ; மேற்கு : முன் சொல்லப்பட்ட 1689 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 14. பதின்மூன்று தசம் மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.3பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனம்.

அத்துடன் முன்சொல்லப்பட்ட 4826 ஆம் இலக்க முறியில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளதற்கு அமைய 1689 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டுகள் 17, 18 மற்றும் 1563 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2 என்பன மீதான பாதை உரிமையுடன் சேர்த்து.

### இரண்டாவது அட்டவணை

வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டத்தின், நுவரகம் கோறளை, நுவரகம் பலாத்த கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் அனுராதபுரம் நகர சபையின் எல்லைக்கு உட்பட்ட புதிய பஸ் நிலைய வளாகத்தின் கட்டம் 11 இல் உள்ள கும்பிச்சன்குளம் ஹேறன என அழைக்கப்படும். நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இறுதி நகர வரைபட இலக்கம் ஏ3 இன் காணித்துண்டு இலக்கம் 2809, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ரி. பி. ஆரியசேனவினால் தயாரிக்கப்பட்ட 1990, யூன் 22 ஆந் திகதியிடப்பட்ட 6/90 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 01 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக் கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்டதும், வரிமதிப்பீட்டி லக்கம் 382/1 கொண்ட ஆதனம். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். பி. அபயசிங்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1990, நவெம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட உறுதியான 308 ஆம் இலக்க உறுதிக்கு அமைவானதும் சொல்லப்பட்ட காணித்துண்டு 01 இன் எல்லைகள் - வடக்கு : F. U. P. A3 இன் காணித்துண்டு 2793 வீதி ஒதுக்கீடு ; கிழக்கு: காணித்துண்டு 241 மற்றும் சொல்லப்பட்ட வரைபடத்தின் மைத்திரிபால சேனநாயக்க மாவத்தை ; தெற்கு : காணித்துண்டு 2780 மற்றும் சொல்லப்பட்ட வரைபடத்தில் உள்ள வீதி ஒதுக்கீடு ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2808. இரண்டு தசம் ஐந்து மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 2.53பே.) அல்லது பூஜ்யம் தசம் பூஜ்யம் பூஜ்யம் ஆறு நான்கு ஹெக்டயர்கள் (ஹெக். 0.0064) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனத்துடனான வர்த்தக கட்டடங்களை யும் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-693/3

---

### ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(அநுராதபுரம் கிளை) - வின் குறூப் ஒப் கொம்பனீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் .-

"வின் குறூப் ஒப் கொம்பனீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடு உடையதாகவும், மேயான கொலதென்ன ஹேவகே அல்பேட் குலதுங்க அடகு வைத்தவராகவும் அடகு வைக்கப்பட்ட ஆதனம் குறித்த மேலதிக விபரங்கள் இத்துடனான அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளதுடன், ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு ஏ. வி. ஏ. திசாநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, யூலை 14 ஆந் திகதியிடப்பட்ட 3825 ஆம் இலக்க அடகு முறி, வின் குறூப் ஒப் கொம்பனீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட கடனை மீளப் பெறுவதற்காக, ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு பாதுகாப்பு அடமானமாக வழங்கப்பட்டது.

முன்சொல்லப்பட்ட மேயான கொலதென்ன ஹேவகே அல்பேட் குலதுங்க முன்சொல்லப்பட்ட வின் குறூப் ஒப் கொம்பனீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் காரியாம்சமான உரிமையாளர், அதனை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பவர் என்பதுடன் வின் குறூப் ஒப் கொம்பனீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பங்குகளைக் கொண்டுள்ளதுடன், வின் குறூப் ஒப் கொம்பனீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் இயக்குனராக செயல்படுவதுடன், சொல்லப்பட்ட நிறுவனத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதுடன், நிறுவனத்தை நிர்வகிப்பவராகவும், அதற்கு அமைய சொல்லப்பட்ட மேயான கொலதென்ன ஹேவகே அல்பேட் குலதுங்க ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ.யினால் வழங்கப்பட்ட நிதிக் கடன் கொடுப்பனவின் மூலம் உண்மையிலேயே பயன் அடைபவர்.

அத்துடன் வின் குறூப் ஒப் கொம்பனீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் மேயான கொலதென்ன ஹேவகே அல்பேட் குலதுங்க என்பவர்கள் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு மிகுதியான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2009, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ தாபனத்திற்கு செர்லப்பட்ட முறி மீது இரண்டு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து ஐநூற்று எண்பத்துமூன்று ரூபா நாற்பத்தொரு சதம் (ரூ. 2,12,583.41) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் சொல்லப்பட்ட 3825 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா2,12,583.41 பணத்தொகையை 2009, நவெம்பர் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யு. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டம், நுவரகம் பலாத்த கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கனதற கோறளவில் உள்ள ஞானிகுளம கம கிராமத்தில் (தற்போது யசசிரிகம மாதிரி கிராமம்) உள்ள 1986.05.29 ஆந் திகதியிடப்பட்ட 262 ஆம் இலக்க இறுதி கிராம வரைபடத்தின் பிற் சேர்க்கை இலக்கம் 7 இன் காணித்துண்டு இலக்கம் 172 இன் உப பிரிவான காணித்துண்டு 209 என அடையாளம் இடப்பட்ட ஞானிக்குளம என அழைக்கப்படும் பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு இலக்கம் 205 ; கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 210 ; தெற்கு : காணித்துண்டு இலக்கம் 211; மேற்கு : காணித்துண்டு இலக்கம் 208, அத்துடன் பூஜ்யம் தசம் பூஜ்யம் ஒன்பது ஐந்து ஹெக்டயர்கள் (ஹெக். 0.095) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம். அத்துடன் F.V.P. 262 (பிற்சேர்க்கை 7) இல் உள்ள கள பட்டியல் இலக்கம் 8 காண்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வழிகளுக்குமான உரிமையுடன் சேர்த்து.

வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டம், நுவரகம் பலாத்த கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கனதற கோறளவில் உள்ள ஞானிகுளம (யசசிரிகம) வில் உள்ள, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. வி. சோமபாலவினால் தயாரிக்கப்பட்ட 1998, யூலை 23 ஆந் திகதியிடப்பட்ட 3117 ஆம் இலக்க வரைபடத்தின் "இடம் கெபெல்ல" என அழைக்கப்படும் காணித்துண்டு 1, என்ற முன்சொல்லப்பட்ட பகிரப்பட்ட ஆதனம். மீள நிலஅளவை செய்யப்பட்டதன் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு இலக்கம் 205 ; கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 210 ; தெற்கு : வீதி; மேற்கு : காணித்துண்டு 208, வீதி அத்துடன் பூஜ்யம் தசம் பூஜ்யம் எட்டு மூன்று ஐந்து ஹெக்டயர்கள் (ஹெக். 0.0835) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம் அத்துடன் F.V.P. 262 (பிற்சேர்க்கை 7) இல் உள்ள கள பட்டியல் இலக்க 8 காண்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வழிகளுக்குமான உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-693/4

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(தெல்கொட கிளை) - பிரமோத ரொஷான் முதநாயக்க

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"பிரமோத ரொஷான் முதநாயக்க கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். ஏ. என். டபிள்யூ. ராஜகருணாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, சனவரி 31 ஆந் திகதியிடப்பட்ட 24664 ஆம் இலக்க மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2009, திசெம்பர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது பதினொரு இலட்சத்து எட்டாயிரத்து இருநூற்று அறுபத்தொன்பது ரூபா பதினேழு சதம் (ரூ. 11,08,269.17) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 24664 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 11,08,269.17 பணத்தொகையை 2010, சனவரி 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஈ. எஸ். ராமநாயக்கவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் சியன் கோறளவின் அத்திக்காரி பற்றுவில் உள்ள பியகம பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட மாக்கொல வடக்கில் உள்ள "மில்லகஹாவத்த" என அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எல். என். பர்னாண்டோவினால் தயாரிக்கப்பட்ட 15.09.2003 ஆந் திகதியிடப்பட்ட 1744 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு எப்2/2 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: இந்த வரைபடத்தின் காணித்துண்டு எப்2/1 ; கிழக்கு : இந்த வரைபடத்தின் காணித்துண்டு 1 ; தெற்கு : இந்த வரைபடத்தின் காணித்துண்டு எப் 2/3 ; மேற்கு : 10 அடி அகலமான வீதி, அத்துடன் கம்பஹா காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் சி 648/222 இல் பதிவு செய்யப்பட்ட பதின்மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 13பே.) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன், 1523 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு எப்1 மற்றும் 4867 இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 1, மீதான பாதை பாவனை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-693/5

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(தெல்கொட கிளை) - குமாரசிறி ஜயகத் பிரியா இம்புலான லியனகே மறுபெயர் இம்புலான லியனகே குமாரசிரி ஜகத்பிரியா மற்றும் இமநோனா கணேபொல ஆராச்சி

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"குமாரசிறி ஜயகத் பிரியா இம்புலான லியனகே மறுபெயர் இம்புலான லியனகே குமாரசிரி ஜகத்பிரியா மற்றும் இமநோனா கணேபொல ஆராச்சி கடப்பாடு உடையவர்களாக, ஹற்றன்

நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். ஏ. என். டபிள்யூ. ராஜகருணாவினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2007, பெப்புருவரி 15 ஆந் திகதியிடப்பட்ட 24712 ஆம் இலக்க முறி மற்றும் 2008, சனவரி 04 ஆந் திகதியடப்பட்ட 25602 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2010, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது ஏழு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா நாற்பது சதம் (ரூ. 7,69,395.40) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 24712 மற்றும் 25602 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 7,69,395.40 பணத்தொகையை 2010, மே 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் சியன்ன கோறளவின் மத பற்றுவின் கிரிகிற்ற கிராமத்தில் உள்ள வலவ்வத்த, வலவ்வத்த மறுபெயர் மில்லகஹாவத்த என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. எச். எம். பி. பெரேராவினால் 23.08.2004 ஆந் திகதியிடப்பட்ட 1159பி வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு "பீ58" என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: 131 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு ஆர் 6 ; கிழக்கு : உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. எச். எம். பி. பெரேராவின் 1159 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு பீ6 ; தெற்கு : 131 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 7சி ; மேற்கு : 1159ஏ ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு பீ 5ஏ. அத்துடன் இருபத்து ஆறு தசம மூன்று ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 26.35பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனத்துடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம், கம்பஹா காணிப் பதிவகத்தில் ஈ 869/43 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஐ. ஏ. சி. சேனரத்னவினால் தயாரிக்கப்பட்ட 131 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு ஆர்6 என அடையாளம் இடப்பட்ட வீதியினை பாவனைக்கு உட்படுத்துவதற்கான உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-693/6

## ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கிறான்ட்பாஸ் கிளை) - ரிக்கிரிதந்திரி மஹசமிலகே யசோதரா குணசேகர பமுனுசிங்ஹ ஆராச்சிகே சுவர்ணலதா

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையினால், 2010, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"ரிக்கிரிதந்திரி மஹசமிலகே யசோதரா குணசேகர பமுனுசிங்ஹ ஆராச்சிகே சுவர்ணலதா கடப்பாடு உடையவர்களாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில், கொழும்பு, பிரசித்த நொத்தாரிசு பி. டி. ரி. தர்மதிலக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, மே 06 ஆந் திகதியிடப்பட்ட 2127 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2009, ஒற்றோபர் 08 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி, பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது பதினொரு இலட்சத்து பதினையாயிரத்து தொளாயிரத்து பதின்மூன்று ரூபா அறுபத்தொரு சதம் (ரூபா 11,15,913.61) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 2127 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 11,15,913.61 பணத்தொகையை 2009, ஒற்றோபர் 09 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின் சியன்ன கோறளை, அத்திக்காரி பற்றுவின் மஹர பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட மஹர சூரியபலுவவில் உள்ள மில்லகஹவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜி. எல். பி. நாணயக்காரவினால் தயாரிக்கப்பட்ட 1990, யூலை 24 ஆந் திகதியிடப்பட்ட 8925 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 10 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 9 ; கிழக்கு : காணித்துண்டு 7 ; தெற்கு : காணித்துண்டு 11 ; மேற்கு : டி. ஏ. மாயாதுன்னவின் காணி. அத்துடன் சொல்லப்பட்ட 8925 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், கம்பஹா மாவட்ட காணிப் பதிவகத்தில் சி397/18 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட பதின்மூன்று தசம் ஐந்து பூஜ்யம் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 13.50பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜி. எல். பி. நாணயக்காரவினால் தயாரிக்கப்பட்ட 24.07.1990 ஆந் திகதியிடப்பட்ட 8925 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டுகள் 7 மற்றும் 11 என அடையாளம் இடப்பட்ட வீதிக்கான ஒதுக்கீடு மீதான பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

8-693/7

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கடவத்தை கிளை) - சமரவீர பட்டபெந்திகே நெயோமி ஹர்ஷனி சமரவீர மற்றும் டோனா தயாவதி அபயவிக்கிரம

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"சமரவீர பட்டபெந்திகே நெயோமி ஹர்ஷனி சமரவீர மற்றும் டோனா தயாவதி அபயவிக்கிரம கடற்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பீ. என். ஏக்கநாயக்காவினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2007, ஏப்பிறல் 10 ஆந் திகதியிடப்பட்ட 6051 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2009, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது இருபத்தைந்து இலட்சத்து ஒன்பதாயிரத்து நூற்று எழுபத்தாறு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 25,09,176.65) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 6051 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 25,09,176.65 பணத்தொகையை 2009, ஒற்றோபர் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் அளுத்குறு கோறளை, ராகம் பற்றுவின் பாலியகொட நகர சபையின் எல்லைக்கு உட்பட்ட பிரிவு இலக்கம் 5 இன் பற்றியாவில் உள்ள "சியம்பலகஹாவத்த" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. டி. எம். ஜே. ரூபசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 01.11.1993 ஆந் திகதியிடப்பட்ட 773 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்தண்டு 5 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : வீதி ; கிழக்கு : வீதி ; தெற்கு : காணித்துண்டு 11 ; மேற்கு : காணித்துண்டு 4, அத்துடன் சொல்லப்பட்ட 773 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், இரண்டு தசம் எட்டு இரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0று. 2.82பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் அளுத்குறு கோறளை, ராகம் பற்றுவின் மபாலியகொட நகர சபையின் எல்லைக்கு உட்பட்ட பிரிவு இலக்கம் 5 இன் பற்றியாவில் உள்ள "சியம்பலகஹாவத்த" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. டி. எம். ஜே. ரூபசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 01.11.1993 ஆந் திகதியிடப்பட்ட 773 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 4 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : வீதி; கிழக்கு : காணித்துண்டு 5 ; தெற்கு : காணித்துண்டு 11 ; மேற்கு : காணித்துண்டு 3, அத்துடன் சொல்லப்படட 773 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், இரண்டு தசம் மூன்று ஒன்பது பேர்ச்சுகள் (0ஏ. 0று. 2.39பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன் 773 ஆம் இலக்க வரைபடத்தின் படி பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-693/8

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"கேனாலீ கிரியேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2009.09.17 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "கேனாலீ கிரியேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "கேனாலீ கிரியேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்

கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

பீவி 69218
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2010, யூலை 29.

8- 564

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**
(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கந்தானை கிளை) - கெரவ்கொடகே டொன் சுரஞ்சி பிரசாத்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

''கெரவ்கொடகே டொன் சுரஞ்சி பிரசாத் கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் கந்தானை பிரசித்த நொத்தாரிசு கே. எம். என். பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, மாச்சு 19 ஆந் திகதியிடப்பட்ட 398 ஆம் இலக்க முறி மற்றும் 2008, யூலை 29 ஆந் திகதி இடப்படட 607 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2010, மாச்சு 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் என்பன மீது இருபத்து மூன்று இலட்சத்து பதின்மூவாயிரத்து நாநூற்று எழுபத்து நான்கு ரூபா அறுபத்தேழு சதம் (ரூ. 23,13,474.67) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 398 மற்றும் 607 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 23,13,474.67 பணத்தொகையை 2010, ஏப்பிறல் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் எஸ். மனம்பேரியினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளவின் ராகம் பற்றுவின் ஜாஎல பிரதேச சபையின் கந்தானை உப அலுவலகத்திற்கு உட்பட்ட கந்தானையில் நெதுருபிற்றியவில் உள்ள ஜம்புகஹாகொட்டுவ வத்தையுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் என். டி. ஜி. சி. குணசேகரவினால் தயாரிக்கப்பட்ட 2001, சனவரி 1 ஆந் திகதியிடப்பட்ட 2127 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : ஜோசப் மல்லவராச்சிக்கு முன்னர் சொந்தமான காணி ; கிழக்கு : ஜே. ஏ. ஜுவனிஸ் அப்புவின் காணி; தெற்கு: டி. குணசேகரவின் காணி மற்றும் வீதி; மேற்கு : பி. லற்றிசியா ரொட்ரிகோவின் அதே காணியின் மிகுதியான பகுதி. அத்துடன் சொல்லப்பட்ட 2127 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும் கம்பஹா காணிப் பதிவகத்தில் பி 674/ 203 இல் பதிவு செய்யப்பட்ட பதினைந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன் சொல்லப்பட்ட 2127 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள எல்லா வீதி மீதான சுதந்திரமான உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-693/10

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**
(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(நுகேகொடை கிளை) – லொக்குமுன்னகே டோனா காந்தி பொத்தேஜு காலம் சென்றவரின் பெருந்தோட்டத்தின் சட்டபூர்வமான வாரிசு வெலதந்திரிகே விமலதாச பொத்தேஜு

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

''வெலதந்திரிகே விமலதாச பொத்தேஜு கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் எம். பீ. எம். மொஹோட்டியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1995, செத்தெம்பர் 04 ஆந் திகதியிடப்பட்ட 484 ஆம் இலக்க முறி மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். குகதரனால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998, பெப்புருவரி 27 ஆந் திகதியிடப்பட்ட

357 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2009, யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஒரு கோடியே அறுபத்தொன்பது இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து தொளாயிரத்து ஐம்பத்து நான்கு ரூபா நாற்பத்துமூன்று சதம் (ரூ. 1,69,34,954.43) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 484 மற்றும் 357 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. ஸ்தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ.1,69,34,954.43 பணத்தொகையை 2010, ஓகத்து 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப் பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

### முதலாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின் சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவின் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகர சபையின் எல்லைக்கு உட்பட்ட கங்கொடவிலவின் பன்கிரிவத்த, 1 ஆவது ஒழுங்கையில் உள்ள 15, 15/4 மற்றும் 15/8 வரிமதிப்பீட்டிலக்கங்களை தற்போது கொண்டுள்ள ''கஹடகஹாவத்த'' என அழைக்கப்படும் காணி. உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஜி. பர்ணாண்டோவினால் தயாரிக்கப்பட்ட 1992, பெப்புருவரி 18 ஆந் திகதியிடப்பட்ட 843 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1டி என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 1ஏ மற்றும் 3 (வீதிக்கான ஒதுக்கீடு) ; கிழக்கு : காணித்துண்டு 1சி மற்றும் 3 (வீதிக்கான ஒதுக்கீடு) ; தெற்கு : காணித்துண்டு 4 ; மேற்கு : தலகலகே ஓவிற்ற அத்துடன் ஒரு றூட் மற்றும் இருபத்தெட்டு தசம் ஒன்பது ஒன்பது பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 28.99பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

### இரண்டாம் அட்டவணை

